# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Provi

## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | தமிழ் மொழியும் இலக்கியமும் II<br>Tamil Language and Literature II | நேரம் :- 2மணித்தியாலம் |
| சுட்டெண்:....................... | 22 \| T \| II | |

### தமிழ் மொழியும் இலக்கியமும் II

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளுக்குரிய மொத்தப் புள்ளகள் 80 ஆகும்

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக
   ஒருவற்கிருக்க நிழலாகாதே
2. பின்வரும் தொடரிலுள்ள எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக
   புலன் அழிந்தொரு புத்துயிர் எய்துவேன்
3. ''சேர் பொன் இராமநாதன்துரைக்கு அப்போது இருபத்தைந்து வயசு. அவரைப்பற்றி யாழ்ப்பாணத்தவருக்கு ஒன்றும் தெரியாது.'' இங்கு இடம்பெற்ற மாற்றுப் பெயர் யாது
4. பின்வரும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு மீண்டும் திருத்தமாக எழுதுக
   ஆழ்கடலிலா ஓரத்திலா என்றாள்
5. 'கற்றவனுக்கு உரியது பணிவு' இவ்வாக்கியம் நான்காம் வேற்றுமையின் என்ன பொருளில் அமைந்துள்ளது
6. பின்வருவனவற்றில் கட்டுரையில் தவிர்க்கப்பட வேண்டியவற்றைத் தருக
   சந்தேகம் ஏற்படக்கூறல், வாசிப்பவருக்கு இன்பம் தருதல், முரண்படக் கூறல், பந்திகளை ஒழுங்குற அமைத்தல்
7. - திருக்குற்றாலக்குறவஞ்சி திரிகூடராயப்ப கவிராயரால் இயற்றப்பட்டது.
   - திருக்குற்றாலக்குறவஞ்சி சிறந்ததொன்றாகக் கருதப்படுகின்றது

   இங்கு இடம்பெற வேண்டிய பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைக் கையாண்டு மீண்டும் திருத்தமாக எழுதுக
8. சமூகம், சமுகம் என்பன பொருள் தரும் வகையில் வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.
9. பூதஞ்சேந்தனார் இனியவை நாற்பதைப் பாடினார். இவ்வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாகத் தருக
10. ''புகையிலைக் கன்றுக்குப் பாத்தி கட்டுவது போல''. இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற வழு யாது

(20 புள்ளிகள்)

**2. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிந்து 250 -300 சொற்களில் எழுதி பொருத்தமான தலைப்பும் இடுக.**

**I.** இன்று மனித சமுதாயம் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டடிய பிரதான இயற்கைக் காரணியாக விளங்குவது நீராகும். நீரின் முக்கியத்துவத்தை இழந்தவர்களாக பலரும் காணப்படுகின்றனர். அடிப்படைத் தேவைகள் தொடக்கம் உற்பத்திகள், போக்குவரத்து, விவசாயம் முதலியனவற்றுக்கு நீர் பல வழிகளிலும் பயன்படுகின்றது. ஆயினும் மனிதனது அதிக தலையீடுகள் காரணமாக நீர் வளம் பாதிப்படைகின்றது. நீர்வளத்தின் முக்கியத்துவம் அனைவராலும் உணரப்பட வேண்டியதன் அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே நீரின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறும் விடயங்களை உள்ளடக்கிய **ஒரு விளக்கக் கட்டுரை** எழுதுக.

**II.** மனிதனுக்கு எதிரான இயற்கை அம்சங்கள் நிறையவே காணப்படினும் மனிதனை அழிக்கின்ற கூறுகளில் ஒன்றாக இன்று போதைப்பொருள் மாறியுள்ளது. அவை நம் நாட்டிற்கு வரும் வழிவகைகளையும் அறிய முடியாதுள்ளன. இவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக இளைஞர்களே விளங்குகின்றனர். இளைஞர்களின் கல்வி, எதிர்காலம் என்பன வெகுவாகப் பாதிப்படைகின்றன. போதைப்பொருளிலிருந்து எமது இளைய சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பொருளில் நீர் நிகழ்த்திய **மேடைப்பேச்சு**

**III.** உள்நாட்டில் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வாழ்வைச் செம்மைப்படுத்தலாம். நம்நாட்டில் தனிமனிதன் ஒருவன் வாழ்வதற்கான பல்வேறு சூழல்களும் நிறையவே காணப்படுகின்றன எனக்கருதும் ஒருவருக்கும், தற்போதய காலத்தில் பணம் என்பது தவிர்க்கப்பட முடியாதது, பணமில்லலர்க்கு இவ்வுலகம் இல்லை. எனவே சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப வெளிநாடுகளுக்கும் சென்று பொருள்தேட வேண்டும் எனக்கருதும் இன்னொருவருக்கும் இடையிலான **ஓர் உரையாடல்** எழுதுக

**IV.** கஸ்ரோ நாளந்தம் கற்றலில் ஈடுபடுபவன். தன்னுடைய கற்றல் நேரம் தனக்குப் போதும் என்றும் கருதுபவன். இந்நிலையில் மாற்றுத் திறனாளிகள் தமக்கெனத் தனியான ஒரு உலகை உருவாக்காமல் சகமனிதர்களுடன் சேர்ந்து பயணிக்கும் நிலையையும் உருவாக்கியுள்ளனர். இவற்றையெல்லம் அவதானித்த கஸரோ தன்னுடைய கற்றல் துறையை மாற்றியமைத்து தன்னையும் ஒரு முழு மனிதனாக மாற்றிக்கொண்டான் என்ற கருத்துப் புலப்பட **ஒரு சிறுகதை** எழுதுக

(25 புள்ளிகள்)

**3. பின்வரும் பந்தியை வாசித்து அதன் சாராம்சத்தை 40 – 45 சொற்களில் அமையுமாறு ஒரு சுருக்கம் எழுதுக. சுருக்கத்தின் இறுதியில் சொற்களின் எண்ணிக்கையகைக் குறிப்டுக**

அந்நிய மொழிக்கு உரியவர்களாகிய பாதிரிமார்கள் அகராதி இயற்றப் புகுந்தது ஒரு நல்ல அதிஷ்டம் என்று தான் கூறவேண்டும். ஏனெனில், சில நன்மைகள் இதனால் விளைந்துள்ளன. முதலாவது, பிறமொழிகளில் அகராதிகள் செப்பமாக அமைந்துள்ள முறையைத் தமிழ் அகராதியிலும் கையாள முடிந்தது. இரண்டாவது, பாதிரிமார்களுக்குத் தமிழ் புதியமொழி

ஆகையினாலே, இம் மொழியிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் இவர்கள் பொருளுணர வேண்டியவர்களாயிருந்தனர். ஆகவே, கடின பதம், எளிய பதம் என்ற வேற்றுமையின்றி, எளிய பதங்களுக்குக் கூடப் பொருள் விளக்க வேண்டியது அவசியமாயிற்று. உதாரணமாக நான், அது, வீடு முதலிய சொற்களையும் அகராதியில் விளக்க வேண்டியதாயிற்று. மூன்றாவது, நூல் வழக்கிலன்றி, சாதாரண மக்கள் பல பிராந்தியங்களிலும் வழங்கி வந்த சொற்களும் அகராதியில் இடம்பெற்றன. தமிழ் கற்ற பண்டிதர்கள் இவ்வழக்குச் சொற்களில் பலவற்றை இழிசன வழக்கு என்றும், வழுச்சொல் என்றும் ஒதுக்கி விடுவார்கள். ஆனால் அந்நிய நாட்டுப் பாதிரிகள் இவ்வாறு ஒதுக்க முடியாது. அவர்கள் சாதாரண மக்களோடு, அதிலும் கல்வி பெறாத கீழ்த்தர மக்களோடு, பழகி வந்தார்கள். அம்மக்கள் பேசுவதை உணர்வதும், அவர்கள் வழங்கும் சொற்களை உணர்வதும் அவசியம்: எனவே அவ்வழக்குச் சொற்களும் அகராதியில் இடம் பெற்றன. இவ்வாறாக, தமிழ் மக்களுள் பல இனத்தாரும் வழங்கும் சொற்கள் எல்லாம் அகராதிகளில் அமைவதற்கு இப்பாதிரிகளே வழிகாட்டியாயிருந்தார்கள்.

(10 புள்ளிகள்)

**4. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

அகப்பாடல்களாகிய இசைப்பாடல்கள் புறப்பாடல்கள் தோன்றிப் பன்னெடுங்காலம் கழித்தே தோன்றியிருத்தல் கூடும். தமிழ்நாடு பரப்பில் மிகச் சிறியது. இதற்குள் சேரர், சோழர், பாண்டியர் என்ற மூன்று பெருங்குடி மக்கள் ஆட்சி செய்துள்ளனர். மிகப் பழங்காலந் தொட்டே இவர்கள் ஆட்சி இங்கு நிலைபெற்றிருந்திருக்கிறது. இது இலக்கிய வாயிலாக நாம் அறியும் உண்மையாகும். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் வாளோடு முன் தோன்றிய மூத்த குடி என்பது இதற்குச் சான்றாகும். இம்மூவருக்குள்ளும் ஓயாது போர் நிகழ்ந்து வந்திருக்கிறது. எனவே, இவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்த நாளே இல்லை எனலாம். எப்பொழுதோ ஒரு முறை இவர்கள் ஒற்றுமை யாய் ஓரிடத்தில் இருக்கக் கண்ட புலவன் ஒருவன் தன் கண்களையே நம்ப இயலாதவனாகிய, இன்றே போல்கநும் புணர்ச்சி“ என்று பாடிச் சென்றான். எனவே பூசலும், பகைமையும் நிறைந்த இவர்கள் காலத்தில் அடிக்கடி ஒருவரை ஒருவர் வென்று அடிப்படுத்தி ஆட்சி செய்துள்ளனர் எனவும் அறிகிறோம். ஆதிகாலத்தில் இவ்வகைப் பகைமை, போற்றற்குரியதாக இருந்திருக்கலாம். கவிவாணர்களும் மாற்றிமாற்றி ஒருவரை ஒருவரே புகழ்ந்திருக்கலாம். ஒவ்வொருவருடைய வீரத்தையும், கொடையையும் புகழ்ந்தும் வியந்தும் பாடிய பாடல்கள் புறத்திணைப் பாடல்களாக அமைந்துள்ளன.

1. மூவேந்தர் ஆட்சி நிலைபெற்றிருந்திருக்கிறது என்பதை எதன் மூலம் அறியலாம்
2. இதனை வெளிப்படுத்தும் தொடர் யாது
3. மூவேந்தர்கள் ஒரு சல சந்தர்ப்பங்களில் ஒற்றுமையாக இருந்துள்ளார்கள் என்பாதற்கான சான்றாதாரம் யாது
4. மூவேந்தர்களினுடைய பகைமைக்கு கிடைத்த பரிசு என்ன
5. புறத்திணைப் பாடல்களாக அமைந்தவை எவை

(10 புள்ளிகள்)

**5. பின்வரும் பகுதியை வாசித்து 100 சொற்களில் எழுதுக**

வாசிப்புப் பழக்கம் இன்று அருகிவருகின்றது. வாசிப்பின் மூலமே ஒருவனது ஆளுமை விருத்தியடையும். ஆனால், இன்று வாசிப்பானது அருகிவிட்டதாகவே விளங்குகின்றது. வாசிப்பதற்கான சூழல் இல்லாமையும் இதற்கு ஒரு காரணமாகின்றது. எனவே, பொழிலகம் கிராமத்தின் செயலாளராக உம்மைக் உமது கிராமத்திலே வாசிப்பின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக்கூறி, நகரத்தின் பொதுநூலகத்தின் பிரதம நூலகரின் உதவியை வேண்டும் வகையில் 100 சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக

**அல்லது**

இன்று சுற்றுச் சூழல் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. சூழலைப்பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். நோயிலிருந்து பாதுகாத்தல், மாசடையாது பாதுகாத்தல், முதலிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதன் போது மனிதர்கள் போக்குவரத்தையும், பொழுதுபோக்கையும் சிறந்ததாகப் பின்பற்ற முடியும். சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி 100 சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** தயாரிக்குக

(15 புள்ளிகள்)